Canadian Tamils for Democracy
ஜனநாயகத்திற்கான கனேடியத் தமிழர்கள்

## கனேடியத் தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்
# கனேடிய ஊடகங்களுக்கு நாம் தலை வணங்குகின்றோம்

இலங்கையில், அரசாங்கத்தினாலும் ஆயுதமேந்திய புலிகள் இயக்கத்தினாலும் தமது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதனால், தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி குறிப்பாக கனடாவிலும் ஏனைய பல நாடுகளிலும் தமது வாழ்கையை நிலைநிறுத்திக் கொண்டுள்ள தமிழ் மக்கள், கனடாவிலும் தங்களது ஜனநாயக உரிமைகளை படிப்படியாக இழந்து வருகின்ற ஆபத்துக்குள் சிக்கியுள்ளனர் என்பதையே, கடந்த 15ம் திகதி வெளிவந்த மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் **"இறுதி யுத்தத்திற்கு நிதியுதவி செய்தல்": புலம்பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்காரப் பணப்பறிப்பும்,** என்னும் அறிக்கை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. இலங்கைத் தமிழர்கள் உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயக சூழலுக்குள்ளேயே வாழ அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அதுபற்றி கேள்வி எழுப்புவதற்கு தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகில் எவருக்கும் உரிமையில்லை என்று அர்த்தப்படும் விதத்திலேயே புலிகள் இயக்கத்தினதும் அதன் பினாமி குழுக்களினதும் வாதங்கள் அமைந்துள்ளதையே கடந்த சில நாட்களாக அவர்கள் வெளியிடும் கருத்துக்களும் அறிக்கைகளும் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இரண்டரை தசாப்த யுத்தத்தின் பாதிப்புக்களினால் யுத்தத்தை வெறுத்து, தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் நிம்மதியானதும், பாதுகாப்பானதுமான எதிர்கால வாழ்கையைத் தேடியே, இலட்சக்கணக்கான இந்த மக்கள் தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி, வெளிநாடுகளுக்கு ஓடிவந்தனர். ஆனால் இந்த நாடுகளிலிலும் வைத்து அவர்கள் கடுமையான அச்சுறுத்தலுக்கும் வன்முறைக்கும் உள்ளாக்கப்படுவதுடன், தாம் விரும்பாத ஒரு யுத்தத்துக்காக, ஆதரவு வழங்க நிர்ப்பந்திக்கப்படுவது மிகவும் மோசமானதொரு ஜனநாயக மறுப்பாகும். அது மட்டுமன்றி புலிகள் இயக்கத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் கெடுபிடி காரணமாகவும், வறுமை காரணமாவும் இன்னமும் இலங்கையில் வாழும் இலட்சக்கணக்கான தமிழ்க் குடும்பங்களின் பராயமடையாத சிறார்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டு, கொடிய யுத்த களத்திற்கு கொண்டுசெல்லப்படும் மனிதாபிமான-மற்ற செயலுக்காக, இங்கு வாழும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் நிதியுதவி செய்ய வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் அவர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணம் அறவிடப்படுவதும் மிக மோசமானதொரு கிரிமினல் குற்றமாகும்.

ஆகவே இலங்கையில் இன்னமும் வாழும் தமிழ் மக்களினதும் அவர்களின் பிள்ளைகளின் நலன்கருதியும், கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நலன் கருதியும், கனடா நாட்டில் நாம் எமது ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகும். அந்த வகையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு எடுத்திருக்கும் இந்த முயற்சிக்கு நாம் நன்றி கூறுவதோடு, அவர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பது அவசியமாகும். அவ்வமைப்பு தொடர்ந்தும் இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறான முயற்சிகளுக்கு, ஜனநாயக பண்பாட்டை நேசிக்கும் கனடாத் தமிழர்களாகிய நாம் தொடர்ந்தும் எமது பூரண ஆதரவினை சகல வழிகளிலும் வழங்கக் காத்திருக்கிறோம் என்பதையும் இத்தால் அறியத்தருகிறோம்.

கனடாவின் பிரஜைகளாக மாறிவிட்ட தமிழ் மக்கள் மீது, உலகின் பல பிரதான நாடுகளில், 'பயங்கரவாத அமைப்பு' எனத் தடைசெய்யப்பட்ட ஆயுதக் குழுவான புலிகள் இயக்கமும் அதன் பினாமி அமைப்புக்களும், வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்களை மேற்கொள்வதும் பலாத்காரமாக பணம் பறிக்க முயற்சிப்பதும், கனேடிய சட்டங்களின்படி சட்டவிரோதமான நடவடிக்கைகள் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியதுடன், **புலிகள் இயக்கத்தையும் அதன் பினாமி அமைப்புக்களையும் கனடா மண்ணில் தடை செய்ய வேண்டும்** என்று செய்திகளையும் வெளியிட்டு, ஆசிரியர் தலைப்புக்களையும் எழுதியதன் மூலம், ஏனைய கனேடிய சமூகங்களுக்கும் உண்மை நிலையைப் புரிய வைத்த அனைத்து கனேடிய ஊடகங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இவ்வறிக்கையை தயாரிப்பதற்காக மேற் கொண்ட ஆய்வின் போது குறிப்பாக கனடாவிலும் மற்றும் இங்கிலாந்து, ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் வாழும் புலம் பெயர்ந்த சாதாரண தமிழர்கள் உட்பட பல சுதந்திரமான ஆய்வாளர்களும் சமூகப் பணியாளர்களும், துணிந்து தமது கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பாகவும் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கனேடிய அரசாங்கமும் மற்றும் கனேடிய பொலீசார் உட்பட சட்டம் ஒழுங்கைப் பேணும் பிரிவினரும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தனது அறிக்கையில் கச்சிதமாக முன்வைத்துள்ள பரிந்துரைகளை உடனடியாக கவனத்தில் எடுத்து, கனேடிய தமிழர்கள் அச்சமின்றி வாழ்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று, ஜனநாயகத்திற்கான கனேடியத் தமிழர்கள் அமைப்பு கோரிக்கை விடுகின்றது.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிறார்கள் பலாத்காரமாக பிடிக்கப்பட்டும் கடத்திச் செல்லப்பட்டும் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படும் கொடுஞ்செயலுக்கு, நிதி மூலதனத்தை வாரி வழங்கும் நாடாக கனடா மாறிவிடும் அபாயத்தில் இருந்து அதனைப் பாதுகாக்கும் பணியில் கனேடிய அரசாங்கமும் கனேடிய பாதுகாப்பு பிரிவினரும் மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், ஜனநாயகத்திற்கான கனேடியத் தமிழர்கள் அமைப்பு வலியுறுத்துகின்றது.

நன்றி.

இவ்வண்ணம்

இணை அமைப்பாளர்